வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் :  ரோஷ்னா காசிம்

தேதி : 12.01.2025 - ஞாயிற்றுக்கிழமை            நேரம் : மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------------------------

***தலைப்புச் செய்திகள்***

தேசிய இளைஞர் தினமான சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினத்தை முன்னிட்டு, அவருக்கு குடியரசு தலைவர், பிரதமர், உள்ளிட்டோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்க இளம் தலைவர்கள் தீவிரமாக உழைக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை ஜம்மு – காஷ்மீர் மாநிலம் சோனாமார்க்கில் 2 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சுரங்கப் பாதையை தொடங்கி வைக்க உள்ளார்.

புதுச்சேரியில் இன்றுமுதல் இரு சக்கர வாகனங்களில் செல்வோர் தலைக் கவசம் அணிவது கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

***தேசிய இளைஞர் தினம் -1 (19)***

தேசிய இளைஞர் தினமான சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினத்தில் அவருக்கு குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். குடியரசு தலைவர் திருமதி. திரவுபதி முர்மு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், இந்தியாவின் மாபெரும் ஆன்மீக சேவையை மேற்கத்திய உலகிற்கு எடுத்துச் சென்றவர் சுவாமி விவேகானந்தர் என்றும், நாட்டு மக்களிடையே அவர் ஒரு புதிய தன்னம்பிக்கையை ஏற்படுத்தினார் என்றும் குடியரசுத் தலைவர் கூறினார். இளைஞர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்தி, மனித குலத்திற்கு சேவை செய்ய சுவாமி விவேகானந்தர் ஊக்கப்படுத்தினார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில் இளைஞர்களுக்கு உத்வேகமாக இருக்கும் சுவாமி விவேகானந்தர் இளம் மனங்களில் ஆர்வத்தையும், நோக்கத்தையும் தூண்டியதாக குறிப்பிட்டுள்ளார். வலுவான மற்றும் வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற அவரது தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்ற அரசு உறுதி பூண்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் நடைபெற்ற வளர்ச்சி அடைந்த பாரதம் இளந்தலைவர்கள் உரையாடல் என்ற நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் பேசிய அவர், இளைஞர்களின் பலம் விரைவில் இந்தியாவை ஒரு வளர்ந்த நாடாக மாற்றும் என்றும் அவர் தெரிவித்தார்.

***தேசிய இளைஞர் தினம் -2 (17)***

இந்தியாவின் யுவ சக்தி குறிப்பிடத்தக்க மாற்றங்களை இயக்கி வருவதாக அவர் கூறினார். வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்க இளம் தலைவர்கள் தீவிரமாக உழைக்க வேண்டும் என்றும், அவர் கூறினார். இந்தியா தனது இலக்குகளை முன்கூட்டியே பல துறைகளில் நிறைவேற்றி வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார். கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடிக்கும் மேற்பட்டோர் வறுமையில் இருந்து மீட்கப் பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

முன்னதாக, இளம் தலைவர்களின் கண்காட்சியையும் பிரதமர் இன்று நேரில் பார்வையிட்டு, அதன் செயல்திறன் குறித்து கேட்டறிந்தார். பின்னர் இளம் தலைவர்கள் தங்கள் தொலைநோக்கு பார்வை குறித்த விளக்கக் காட்சிகளை பிரதமரிடம் காட்சிப்படுத்தி விளக்கமளித்தனர். இந்த விளக்கக் காட்சிகள் இந்தியாவில் மிக முக்கியமான சவால்களை நிகழ்த்தும் என்பதற்கான புதுமையான யோசனைகள் மற்றும் தீர்வுகளை பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருந்தன.

வளர்ச்சி அடைந்த பாரதம் இளம் தலைவர்கள் உரையாடல் நிகழ்ச்சி கடந்த வெள்ளிக்கிழமை அன்று டெல்லியில் தொடங்கியது. இந்த நிகழ்ச்சியின் இறுதி நாளான இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி நாடு முழுவதிலும் இருந்து வந்துள்ள மூவாயிரம் துடிப்பான இளம் தலைவர்களுடன் உரையாடினார்.

*தேசிய இளைஞர் தினம் -3 (6)*

அவர்களுடன் மதிய உணவு அருந்திய பிரதமர், அவர்களுடன் தங்கள் கருத்துக்கள், அனுபவங்கள், மற்றும் விருப்பங்கள் போன்றவற்றை நேரடியாக பகிர்ந்து கொண்டார்.

நிகழ்ச்சியில் 10 கருப்பொருட்கள் குறித்த பங்கேற்பாளர்கள் எழுதிய சிறந்த கட்டுரைகளின் தொகுப்பையும் பிரதமர் வெளியிட்டார். இந்த கருப்பொருட்கள் தொழில்நுட்பம், நிலைத்தன்மை, பெண்களுக்கு அதிகாரமளித்தல், உற்பத்தி மற்றும் விவசாயம் போன்ற பல்வேறு பகுதிகளை உள்ளடக்கியதாகும்.

*சுரங்கப்பாதை (6)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை ஜம்மு – காஷ்மீர் மாநிலம் சோனாமார்க்கில் சுரங்கப்பாதை திட்டத்தை தொடங்கி வைக்க உள்ளார். இத்திட்டம் 2 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 12 கிலோமீட்டர் தூரத்திற்கு ஸ்ரீநகர் மற்றும் சோனாமார்க் இடையே அமைக்கப்பட்டுள்ளது. இந்த சுரங்கப் பாதை திட்டம் லே வரை செல்லும். இது அனைத்து வானிலைக்கும் ஏற்றவாறு ஆண்டு முழுவதும் பயணிக்க ஏற்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

***இஸ்ரோ (3)***

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் அதன் 2 செயற்கை கோள்களை ஸ்பாடெக்ஸ் திட்டத்தின் கீழ், சேசர் மற்றும் டார்கெட் செயற்கைக் கோள்களை இணைக்க 3 மீட்டர் தூர இடைவெளியில், கொண்டு வந்துள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

***குடியரசு தின ஒத்திகை (5)***

டெல்லியில், இன்று கடும் குளிரையும் பொருட்படுத்தாமல், குடியரசு தின ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது. வரும் 26ஆம் தேதி குடியரசு தின விழா கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. குடியரசு தின அணிவகுப்பிற்கான ஒத்திகை நிகழ்ச்சி கடந்த சில நாட்களாக டெல்லி கடமைப் பாதையில் நடைபெற்று வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

***வானிலை ஆய்வு மையம் (4)***

இந்திய வானிலை ஆய்வு மையம் தொடங்கப்பட்டு வரும் 15ஆம் தேதியுடன் 150 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. இதனையொட்டி டெல்லி ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில், வானிலைக்கான ஓட்டம் என்ற பெயரில் விழிப்புணர்வு ஒட்டம் நடைபெற்றது. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

***ஜெய்சங்கர் (6)***

அமெரிக்காவின் 47ஆவது அதிபராக திரு. டொனால்டு டிரம்ப் வரும் 20ஆம் தேதி பதவியேற்க உள்ளார். இந்த பதவியேற்பு விழாவில் இந்தியாவின் சார்பில், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் பங்கேற்பார் என மத்திய அரசு அறிவித்துள்ளது. இப்பயணத்தின்போது, புதிதாக பொறுப்பேற்கும் பல்வேறு பிரதிநிதிகளுடனும் அவர் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

***ராஜ்நாத் சிங் (13)***

இளைஞர்களின் புதிய சிந்தனைகள், உழைப்பு உள்ளிட்டவை சர்வதேச அளவில் இந்தியாவிற்கு புதிய அடையாளத்தை உருவாக்கும் என்று, பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், தெரிவித்துள்ளார். உத்தரப்பிரதேசத்தில் நேற்று தனியார் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பங்கேற்றுப் பேசிய அவர், வரும் 2047ஆம் ஆண்டு வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளைஞர் சக்தி முக்கிய பங்காற்றும் என்று தெரிவித்தார். இந்தியாவின் வல்லமையை ஒட்டுமொத்த உலக நாடுகளும், உற்றுநோக்கத் தொடங்கி இருப்பதாக அவர் தெரிவித்தார். இளைஞர்களின் அறிவாற்றல், திறமை, உறுதிப்பாடு, ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதே, தேசத்தின் வல்லமை என்றும் அவர் தெரிவித்தார்.

சுவாமி விவேகானந்தரின் சித்தாந்தம் மற்றும் வாழ்க்கையை இளைஞர்கள் தங்களின் உந்து சக்தியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

***அஸ்வினி வைஷ்ணவ் (9)***

வரும் 2047ஆம் ஆண்டிற்குள் நமது எதிர்காலத்தை வடிவமைப்பதில் உள்கட்டமைப்பு, உற்பத்தி திறன், சட்ட சீர்திருத்தங்கள், உள்ளிட்டவற்றில் முதலீடு செய்வது அவசியம் என்று மத்திய ரயில்வே துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். புனேவில் நடைபெற்ற விழா ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர், தொலைத்தொடர்பு துறையில் நாடு அடைந்துள்ள முன்னேற்றத்தை எடுத்துரைத்தார். புனேவை பொறுத்த வரை ரயில் சேவைகளை மேம்படுத்த கூடுதல் வசதிகள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இதற்கான கணிசமான நிதி ஒதுக்கப்படும் என்றும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

***இலங்கை கடற்படை (7)***

எல்லைத் தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி ராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேரை, இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். சுமார் 400க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் நேற்று மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் சென்றனர். அதில் 2 விசைப் படகுகளையும், அதிலிருந்த 8 மீனவர்களையும், எல்லைத் தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி இலங்கை கடற்படையினர்

பிடித்துச் சென்றனர். காங்கேசம் துறைமுகத்தில் வைக்கப்பட்டிருந்த அவர்கள் விசாரணைக்கு பிறகு அந்நாட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளனர்.

***ஹெல்மெட் (14)***

புதுச்சேரியில் இன்று முதல் இரு சக்கர வாகனங்களில் செல்வோர் தலைகவசம் அணிவது கட்டாயமாக்கப் பட்டுள்ளது. சாலை விபத்துக்களில் உயிரிழப்புகளை தடுக்க இரு சக்கர வாகனங்களில் செல்வோர் கட்டாயம் ஹெல்மெட் அணிய வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதன்படி புதுச்சேரியில், ஹெல்மெட் அணியாமல் சென்றால், ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, இன்று செய்தியாளர்களிடம் பேசிய முதுநிலை காவல்துறை கண்காணிப்பாளர் திரு. பிரவீன் குமார் திரிபாதி, ஹெல்மெட் அணிவதை யாரும் தவிர்க்கக் கூடாது என்றும், ஆந்திரா, கர்நாடகா, சென்னை போன்ற பெரு நகரங்களில், இரு சக்கர வாகன ஓட்டிகள் ஹெல்மெட் அணிவது போல், புதுவை மக்களும் ஹெல்மெட் அணிவதை பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். பொங்கல் பண்டிகைக்குப் பிறகு புதுவை நகர சாலைகள், கடலூர், விழுப்புரம் சாலைகளில் வாகனச் சோதனைகள் தீவிரப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

*ஏனாம் (4)*

புதுவை பகுதி ஏனாமில் இன்று சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினம் தேசிய இளைஞர் தினமாக கொண்டாடப் படுகிறது. ஏனாம் படகு சாலையில் அமைந்துள்ள சுவாமி விவேகானந்தரின் சிலைக்கு மண்டல நிர்வாகி திரு. முனுசாமி, ஆணையர் திரு. இராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

தேசிய இளைஞர் தினமான சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினத்தை முன்னிட்டு, அவருக்கு குடியரசு தலைவர், பிரதமர், உள்ளிட்டோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்க இளம் தலைவர்கள் தீவிரமாக உழைக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை ஜம்மு – காஷ்மீர் மாநிலம் சோனாமார்க்கில் 2 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சுரங்கப் பாதையை தொடங்கி வைக்க உள்ளார்.

புதுச்சேரியில் இன்று முதல் இரு சக்கர வாகனங்களில் செல்வோர் தலைக் கவசம் அணிவது கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RM / BR / RK